# ‘வலசை’ புதினம் பேசும் இயற்கை வளங்களும்இ வனவிலங்குகள் பாதுகாப்பும்.

**மு.சுரேஷ்குமார்**
**தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்**
**தமிழ்நாடு திறந்தநிலைப்**
**பல்கலைக்கழகம்,சென்னை**

42

.

**ஆய்வு சுருக்கம் :**

விலங்கிலிருந்து மனிதன் பிறந்தான் என்றும் விலங்கின் பரிணாம வளர்ச்சியே மனிதப்பிறவி என்றும் பல்வேறு ஆய்வுகள் கூறுகின்றது. இருப்பினும் காலப்போக்கில் விலங்குகளை அழித்து மனிதன் தன் தேவைகளை பூர்த்தி செய்கின்றான். சு.வேணுகோபால் அவர்களது படைப்பில் உருவான வலசை எனும் புதினமும் வனவிலங்குகளையும், மனிதர்களையும் மையமாக வைத்து எழுதப்பட்ட ஓர் புதினமாகும். இக்கதை யானைகளின் வழித்தடத்தில் மனிதர்களின் ஆக்கிரமிப்புப் பற்றி பேசுவதாக அமைந்துள்ளது. கதை முழுவதும் சுற்றுச்சூழல் கருத்தாக்கம் பற்றி விரிவுரைப்பதாகவே அமைந்துள்ளது. மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் யானைகளின் வழித்தடத்தில் விவசாயம், ஆன்மீக நிலையங்கள் கல்வி நிறுவனங்கள் என்று தொடர்ந்து கொண்டிருக்கும் ஆக்கிரமிப்புதான் நாவலின் மையக் கருத்தாக அமைந்துள்ளது. யானைகள் விளைச்சலை அழிக்கின்றன எனும் விவசாயிகளின் வேதனையும்இ தாயோடு இளம் வயதில் வலம் வந்த பாதைகள் இன்று மனிதர்களின் ஆக்கிரமிப்பால் உருமாறிக் கிடப்பதைப் பற்றிய யானைகளின் உணர்வுகளாக விரிந்து செல்கிறது கதை. மனிதர்களுக்கும்இ விலங்குகளுக்கும் இடையேயான நிரந்திர யுத்தமே இந்நாவலின் அடிப்படை கருத்தாகும்.

முன்னுரை :

சமுதாயத்தில் இன்று எண்ணற்ற சிக்கல்கள் பற்றி பலப் புதினங்கள் பேசினாலும்இ சுற்றுச்சுழல் பற்றிய விழிப்புணர்வு மக்களிடம் ஏற்பட ஒரு சில புதினங்களே எழுதபபடுகிறது அவ்வகையில் வனவிலங்குகள் அதிலும் குறிப்பாக யானைகள் பற்றிய சுற்றுச்சூழல் கருத்தாக்கத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட புதினமே இந்த வலசை ஆகும் . மனிதர்களுக்கு மட்டும் பூர்வீக இடங்கள் இல்லை விலங்குகளுக்கும் பூர்வீக இடங்கள் உண்டு என்பதை அழுத்தமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. யானைகளின் வழித்தடத்தில் மனிதர்களின் ஆக்கிரமிப்புஇ அதனால் காடுகளில் வாழும் யானைகளுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் ஏற்படும் பாதிப்புகள் பற்றிக் கூறுவது இப்புதினத்தின் கதையாகும். அவற்றை கீழ்வரும் ஆய்வுக்கு கட்டுரையில் விரிவாகக் காண்போம் .

**வனவிலங்குகளும் சுற்றுச்சூழலும் :**

ஆதிகால மனிதன் வனத்தையும், வனவிலங்குகளையும் கடவுளாக வழிபட்டு வந்தான். ஆனால் தற்போது வனங்களை அழித்துவிட்டு, வனவிலங்குகளை காடுகளில் இருந்து வெளியேற்றிவிட்டு கோவில் காட்டுகிறார்கள் இவ்வாறான செயல்கள் நாம் இயற்கைக்கும் இயற்கை சார்ந்த



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

வனவிலங்குகளுக்கும் இழைக்கும் மிகப்பெரிய வன்மமாகவே பார்க்கப்படுகிறது. காடுகளை அழித்து அவற்றை நாம் விளைநிலங்களாகவும், ஆன்மீக நிலையங்களாகவும், கல்வி நிறுவனங்களாகவும் ஆக்கிரமித்து விட்டு நாம் வனவிலங்குகளைக் குறைக் கூறுகிறோம். அவைகள் நம் கிராமத்திற்குள் வந்து அட்டகாசம் செய்வதாக எண்ணுகிறோம். தற்போது மனிதர்களாகிய நாம் வாழும் இடங்கள் எல்லாம் முன்னர் வனவிலங்குகள் சுதந்திரமாக சுற்றித் திரிந்த இடங்கள் என்று அவைகளுக்கு மட்டுமே தெரியும் தற்போது மனிதர்கள் விலங்குகளின் வாழ்வாதாரமான காடுகளை அழித்து விட்டு அதில் அவன் குடியேறிக் கொள்கிறான். வனவிலங்குகள் இயற்கையை சார்ந்தே வாழ்ந்து விட்டது. அவற்றை வேட்டையாடி வேட்டையாடி அவற்றின் எண்ணிக்கைக் குறைந்து விட்டன .

மனிதர்கள் வனங்களில் பிளாஸ்டிக் போன்ற மக்காத குப்பைகளைப் பயன்படுத்துவது மட்டுமல்லாமல் காடுகள் அவற்றின் இயற்கைத் தன்மையை இழப்பதற்கும் காரணமாகிறார்கள். அவற்றை வனவிலங்குகள் உண்டு பெரும்பாலான விலங்குகள் நோய் வாய்ப்பட்டு இறந்து விடுகின்றன. வேட்டையாடுபவன் தெரிந்தே சுற்றுசூழல் விலங்குகளை கொல்கிறான். சுற்றுசூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தி விலங்குகளை கொள்பவனும் ஒரு வகையில் வேட்டைக்காரர்கள் என்றே கூறலாம் .

**யானை வழித்தடமும் ஆக்கிரமிப்பும் :**

காடுகளில் வாழும் யானைகளின் வழித்தடங்களில் மனிதர்களின் ஆக்கிரமிப்பு பற்றி இப்புதினத்தின் வாயிலாக ஆசிரியர் கூறுவது,

"சில விஷயங்கள் சொன்னாலும் எடுபடமாட்டேங்குது. மலையடிவாரத்த நினைச்சாலே மனசு பதறுது. தீத்திபாளையத்துக்கு கீழ 300 ஏக்கரில் ஒரு காலேஜ், சாடிவாயலுக்கு பக்கத்துல 400 ஏக்கரில் ஒரு யூனிவர்சிட்டி, செம்மேடு பக்கத்துல 300 ஏக்கர்ல ஒரு ஆசிரமம் , ந்த ஆசிரமம் பத்தாதுன்னு உரிப்பள்ளம் பக்கத்துல 350 ஏக்கர்ல இன்னொரு ஆசிரமம். வெள்ளாங்குட்டை அடிவாரத்துல 300 ஏக்கர்ல பசுமை குடியிருப்பு, அப்புறம் மலைமேல் 20 ஆயிரம் ஏக்கர்ல ஏலம், 20 ஆயிரம் ஏக்கர்ல தேயிலை. போற வர்ர இடத்துல எல்லாம் வீடு வீடு வீடுகள்தான். பத்துக்குளம் போச்சு, நாலு பாறைக்குன்று போச்சு. 400 ஏக்கர்ல மனுசங்க விளையாட கோல்ப் மைதானம். 1700 ஏக்கர்ல மதுக்கரைல இருந்து தீத்திப்பாளையம் வரைக்கும் ஒருத்தன் வளைச்சி பவுண்டரி அடிச்சு போட்ருக்கான். இதுவெல்லாம் யானை மேஞ்சு காடு அழியாது சுகுமார். மனுசங்க மேஞ்சி அழிச்சுப் போட்டானுங்க.

- வலசை. ஆசிரியர் சு.வேணுகோபால். ப எண் - 156.

என்று , காடுகளில் வாழும் யானைகளை மனிதர்கள் விரட்டியடித்து விட்டு பின்னர் யானைகள் ஊருக்குள் புகுவதாக யானைகளை குறை கூறுகின்றனர். இத்தகைய நிகழ்வுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்றால் வனப்பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டும், வன ஊயிரினங்கள் பாதுகாக்கபட வேண்டும் என்பதே நம் அனைவரின் கருத்தாகும்.

**வேளாண்மையும் வனஉயிரிகளும் :**

மனிதர்களுக்கு அடிப்படை உணவு, உடை, இருப்பிடம் ஆகும். இவற்றில் பிரதானமாக கொண்டவையான உணவு மற்றும் உடை ஆகியவை வேளாண்மையை அடிப்படையாக கொண்டவை.

உழவு பற்றி வள்ளுவர் கூறுவது ,

" சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை "

- குறள் - 1031. குடியியல்.

**உரை :**

உழவின் வருத்தத்தை கண்டு பிற தொழில்களை செய்து திரிந்தாலும், முடிவில் ஏருடையவரையே உலகம் உணவுக்கு எதிர்பார்ததலால் , உழவே சிறந்தது.

- புலியூர் கேசிகன்.

மேற்கூறியவாறுஇ உலகத்தில் சிறந்த தொழில் வேளாண் தொழில் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கூறிவிட்டார். இருப்பினும் வனவிலங்குகளை அழித்துவிட்டு வனப்பகுதிகளில் வேளாண்மை செய்வது வனவிலங்குகளை மட்டுமல்லாமல் சுற்றுச்சூழலுக்கும் எதிரானதாகவே பார்க்கப்படுகிறது.

"உயினங்கள் வாழத்தகுதியுள்ள இடமே, மனிதர்கள் வாழத் தகுதியான இடம்" என்ற அடிப்படையில், யானைகளின் வழித்தடம் மற்றும் உயிரினங்களின் வாழ்விடத்தை காப்பதும், மாசற்ற நகரத்தை உருவாக்குவதும் இன்று மக்களாகிய நமது கைகளிலேயே தங்கியுள்ளது. மதுரையில் 47 நீல மயில்களின் இறப்பு என்ற பத்திரிகை செய்தி சோகத்தை ஏற்படுத்துகிறது. பயிர்களுக்கு சேதம் ஏற்படுத்துகிறது என்பதற்காக மயில்களை கொன்றால், நாளை எந்த உயிரினமும் இப்புவியில் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் அற்று போய்விடும் அபாயமுள்ளது. ஒரு புறம் உயிரினங்களின் இறப்பு எனில், மறுபுறம் தூய்மையற்றப் பகுதிகளாக தமிழகத்தின் பல மாவட்டங்கள் மாறி வருகின்றன எனும் செய்திகள் உண்மையில் அச்சத்தை ஏற்படுகின்றன .

- உயிர் (இரு மாத இதழ்)

(ஜூலை-ஆகஸ்ட்- 2018)

உயிர் தலையங்கம், ப.எண் -6.

இவ்வாறு, வன உயிர்கள் வாழும் இடங்களை ஆக்கிரமித்து வேளாண்மை செய்பவர்கள் சமூகத்திற்கும், சுற்றுச்சூழலுக்கும் எதிரானவர்கள் என்றே பார்க்கப்படுகிறார்கள்.

**இயற்கைச் சூழல் :**



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

இவ்வுலகமானது மனிதர்களும் மற்ற உயிரினங்களும் ஒன்றித்து வாழும் வகையிலேயே படைக்கப்பட்டுள்ளது. ஆதி காலத்தில் மனிதர்களும் விலங்குகளும் இணைந்து இயற்கைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் காடுகளிலும், நீர்நிலைகளிலுள்ள இடங்களிலும் வாழ்ந்து வந்தனர். மனிதன் தன் உணவுத் தேவைக்காக மட்டுமே விலங்குகளை வேட்டையாடி உண்டு வாழ்ந்து வந்தான். இதனால் விலங்குகளும் மற்ற உயிரினங்களும் அழியாமல் நிலைத்து வாழ்ந்தன. ஆனால் தற்போது நகரமயமாதல் மற்றும் மக்கள் தொகைப் பெருக்கத்தின் விளைவால் காடுகள் அழிக்கப்பட்டு அதன் வளங்கள் சுரண்டப்படுவதால் விலங்குகள் அழிந்து வரும் சூழல் ஏற்படுகின்றது. மேலும் உற்றுக் கூறினால் இப்பூமிக்கு ஆதாரமாக அமைவது காடுகளே ஆகும். இப்பூமியின் நிலப்பரப்பில் 30 சதவிகிதம் காடுகளால் சூழ்ப்பட்டப் பகுதியாகும் காடுகள் வனவிலங்குகளின் பாதுகாப்பு அரணாக விளங்குபவை. பூமிக்கு மழையைப் பெற்றுத் தரும் முக்கிய பங்கு காடுகளையே சாரும். காடுகள் என்பது வெறும் மரங்கள், செடி, கொடிகள் மட்டுமல்லாது விலங்குகள், பறவைகள், நுண்ணுயிரிகளின் புகலிடமாகவே அமைந்துள்ளது.

காடு பற்றி வள்ளுவர் கூறுவது ,

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண்."

- குறள் : 742

**உரை:**

நீலமணி போன்ற நீரினையுடைய அகழியும், வெளியான நிலப்பரப்பும், உயரமான மலையும், மரநிழலாற் வெறும் மரங்கள் செடி கொடிகள் மட்டுமல்லாது விலங்குகள் பறவைகள் நுண்ணுயிரிகளின் புகலிடமாகவே அமைந்துள்ளது.

- புலியூர் கேசிகன்.

**வனவிலங்குகளும் மனிதர்களும் :**

இயற்கையும் விலங்குகளும் ஒன்றோடு ஒன்றுப் பின்னிப் பிணைந்த சூழலே மனிதர்களின் வாழ்வியல் சூழலை சிறப்பாக வழி நடத்துகிறது. உலகத்தில் பலவகை விலங்குகள் உள்ளன. அவை நமக்கு பல வழிகளிலும் உதவுகின்றன. விலங்குகளின் முக்கித்தையும், பாதுகாப்பையும் கருதியே ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 4ஆம் நாள் உலக விலங்குகள் தினம் சுற்றுச்சூழல் ஆர்வலர்களால் கொண்டாடப் படுகின்றது. உலகில் முதன் முதலாக 1931ஆம் ஆண்டு இத்தாலியின் 'புளோரன்ஸ்' நகரில்தான் வனவிலங்குகள் தினம் கடைப் பிடிக்கப்பட்டது. இது இன்று உலக அளவில் அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருவது வரவேற்கத்தக்கது. இத்தாலி நாட்டை சேர்ந்த வன ஆர்வலர் 'பிரான்சிஸ் அசிசி' அவர்கள் விலங்குகள் மீது அன்பு கொண்டவராவார். இவர் விலங்குகளைக் காப்பதற்கான முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுத்தார். இதன் காரணமாகவே அவரது நினைவு நாள் உலக விலங்குகள் தினமாக சுற்றுச்சூழல் ஆர்வலர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.


Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

மனிதனைப் போலவே விலங்குகளுக்கும் தான் வாழ்ந்த இடம் இதனது பூர்வீகம் என்று நன்றாக தெரியும். காடுகளை அழித்துவிட்டு வனவிலங்குகள் வேறு இடத்திற்கு கொண்டுச் செல்லப்பட்டால்இ அவை தான் வாழ்ந்த காடுகளை தேடிச் செல்லும்.

யானைகளின் பூர்வீகம் பற்றி,

“குடகுமலை அடிவாரத்தில சுத்தித்திரிஞ்ச ஒரு யானை, அடிக்கடி ஊருக்குள்ளயும் தோட்டத்துக்குள்ளயும் புகுந்து சேதம் பண்ணிக்கிட்டே இருந்திச்சு. முடுக்கி விட்டாலும் மறுபடியும் ஊருக்குள்ள வந்து ஆளுகள அடிச்சுக் கொல்றது, மாடுகன்ன தொரத்தி அடிக்கிறதுன்னு ரவுசு விட்டது. சரி இனி விட்டா ஆபத்துன்னு காடு கடத்துனாங்க. வீரப்பூரில இருந்து இந்தப் பக்கம் பந்திப்பூர் காட்டுல கொண்டு போய்விட்டாங்க. வீரப்பூருக்கும் பந்திப்பூருக்கும் கிட்டத்தட்ட 240 கிலோமீட்டர் தூரம். மறுமாசம் பார்த்தா அதே வீரப்பூர் மலையடிவாரத்தில வந்து நிக்கிது. உங்களுக்கு மட்டும்தான் பூர்வீக ஊரு இருக்கணுமன்னு மெச்சிக்கிர்றீங்க.

“பொள்ளாச்சி வனச்சரகத்தில திரிஞ்ச யானைக கடந்த எட்டுவருசமா ஆயக்குடி தாண்டி கெழக்க போகல. போன வருசம் ஒரு கூட்டம் செம்பட்டி மலையடிவாரத்துக்கே வந்திருச்சு. சுத்தி இருக்கிற ஊர்கள்ல புகுந்து ஆட்டி எடுத்திருச்சு. அஞ்சு பேரப் போட்டுத்தள்ளிருச்சு. அந்தப் பக்கத்து மக்கள் நாங்க யானைகள முப்பது வருசமா பாக்கலன்னாங்க. எங்க தாத்தன் பூட்டன் காலத்தில இங்க இருந்ததா சொல்றாங்க. ஆனா இங்கிலீஷ்காரன் 220 வருசத்துக்கு முந்தி இங்க பெரிய யானைக் கூட்டம் மலைக்காட்டுல இருந்ததா எழுதி வச்சிருக்கான்.

- வலசை. ஆசிரியர் சு.வேணுகோபால். ப எண் – 155, 156.

**முடிவுரை :**

காடுகள் பாதுகாக்கப்படும் போது விலங்குகளின் இருப்பிட பாதுகாப்பு உறுதி செய்ய முடியும். அவற்றால் சுதந்திரமாக நடமாடவும், தம் இனத்தைப் பெருக்கிக் கொள்ளவும் முடியும். வாழ்வின் அபாயத்திலிருந்து வனவிலங்குகளை பாதுகாப்பதே நம் தலையாயக் கடமையாகும். வன விலங்குகளின் உறைவிடமாகவுள்ள காடுகளை பாதுகாப்பதும் விலங்குகளுக்கு நாம் செய்யும் நற்பலனாக பார்க்கப்படுகிறது. மேலும் விலங்கு வதைக்கு எதிராக பல்வேறு சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளன. இதற்கு உதாரணமாக 1972ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்திய வன உயிர் பாதுகாப்பு சட்டம் மற்றும் 2004ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பல்லுயிர் பெருக்க சட்டம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். மக்களிடையே வனவிலங்குகளைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு அவற்றின் அவசியத்தையும் உணர்த்த வேண்டும். வனவிலங்குகள் பாதுகாப்பு என்பது தனிமனிதனுக்கு மட்டுமன்றி ஒட்டு மொத்த உலகத்திற்கும் நன்மை பயக்கும். காடுகள் ஆக்கிரமிப்புகளை நிறுத்தி வனவிலங்குகளை அதன் வாழ்விடங்களிலேயே வாழ விட்டால் மட்டுமே வனங்கள் அதன் எழில்மிகு இயற்கை சுற்றுச் சூழலுடன் தோற்றம் அளிக்கும் என்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.